ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

எட்டாம் வகுப்பு - தமிழ் பருவம்-3 தேர்வு-1(இயல்-7)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. சிங்கம் ____________யில் வாழும்.
அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை

2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு __________.
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

3. இந்த ___________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.
அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்

4. வானில் முழுநிலவு அழகாகத் _________________ அளித்தது.
அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்

5. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________
அ) இதந்தரும் ஆ) இதம்தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

6. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________________
அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து

7. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______________
அ) போன்றன ஆ) போலன்றன இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன

8. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
அ) என் + இருள் ஆ) எட்டு + இருள்
இ) என்ற + இருள் ஈ) என்று + இருள்

9. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____________
அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி இ) வெண் + கரி ஈ) வெங் + கரி

10. 'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________
அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + இல்லாமல்
இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல்

LIVEWORKSHEETS

## II. பொருத்துக

1. மறலி - யானை
2. அருவர் - காலன்
3. கரி - தமிழர்
4. சீவன் - வையம்
5. உலகம் - உயிர்

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. விடுதலைத் திருநாள் என்ற கவிதை இயற்றியவர் ______________
2. விடுதலைத் திருநாள் என்ற கவிதையில் கூறப்பட்டுள்ள நாள் _______
3. கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் ______________
4. போரில் ஆயிரம் __________க் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் பரணி புகழ்ந்து பாடுகிறது.
5. கலிங்கப்போரில் பங்குகொண்ட நாடுகள் __________,__________

**விடைகள்**

கலிங்கம், சோழம் | செயங்கொண்டார் | மீரா

சுதந்திர தினம் | யானையை

LIVEWORKSHEETS